முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1312

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.05.2023, புதன்கிழமை

1. ஓங்கார பிரம்ம சூட்சமமே
   ஓங்கார ஞான சூட்சமமே
   ஓங்கார குடில் படைத்து அருளுகின்ற
   ஓங்காரன் என் அவதாரமே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
   வரமாக நித்தம் உந்தனுக்கு
   வல்லமை கூட்டி ஆறுமுகன்யான்
3. யானும் அற்புதம் நிகழ்த்தி வர
   உயர்வான அரங்கன் உன் திருவடி பற்றி
   ஞானம் பயிலும் மக்களுக்கெல்லாம்
   ஞாலமதில் ஞானசித்தி உறுதிஉறுதி
4. உறுதிகொண்டு உன்பால் சரணடைவு
   உலகத்தில் கொண்ட மக்களுக்கு
   ஆறுமுகன்யான் இறங்கி அருள் புரிவேன்
   ஆக்கமாக ஞான வழிகாட்டுவதோடு
5. அவர்களுக்குண்டான பிறவிவழி தொடரும்
   கர்மவினை அனைத்தும் அகற்றி
   வரமென இனிவரும் காலம்
   வாழுகின்ற காலமே வள்ளல் தன்மையோடு
6. தன்மைபட இனி பிறவாத தக்கதொரு பெரும் பேற்றுக்குண்டான
   உயர்வான வழிகாட்டி இனிதே உலகத்தில் அரங்கன் உன்வழி
   தயவாக அவர்களை எல்லாம் ஞானிகளாக்கி
   தக்கபடி ஆறுமுகன்யான் ஞானஆட்சி தரணியில்படைத்து அற்புதம் நடத்துவேன்
7. நடத்தவே அரங்கன் உன்வழியே உயர்வழி
   நம்பிக்கை கொண்ட மக்களுக்கு என்வழி
   தடையின்றி ஞானசித்தி உறுதி
   தண்டாயுதன் என்காட்சியும் உறுதிஉறுதி

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–